# கையேந்தி கேட்கின்றேன் இறைவா

கையேந்தி கேட்கின்றேன் இறைவா - என்
கறைகளைப் போக்கி
நிறைகளைப் பெருக்கிட -( 2 )
ஐயா உன் பேரருளைப் பொழிந்து - உன்
அன்பினை நாளும் அமுதெனப் பருகிட

**1**
நான் எனது என்பதொரு தன்னலமே
நாம் நமது என்ற உறவு பொது நலமே-2
பாங்குடனே வாழ்வதை நான் புரிந்து-இந்த
பாரினில் ஒழுகிட அருள்புரி எனவே

**2**
நேரான வழிநடந்து புவி மீதிலே
நிலையாக உன் வழியில் வாழ்வதையே-2
பேறாக நான் ஏற்று மகிழ்ந்து - எந்தன்
பெருமான் உன் பதம்
பணிந்திட அருள்வாய்